நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.
நாள் : 05.06.2020

2020-ஆம் ஆண்டு ஜீன் மாதம் 05-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் அவசரக் கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

## பொருட்களின் விபரப்பட்டியல்

**பொருள் : 1**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந. க. எண். 7366/2016/UPA நாள். 18.12.2019 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் 3984/2013/B1 நாள்.24.12.2019 ஆகிய கடிதங்களில் நகராட்சி பகுதிகளில் வியாபாரம் செய்யும் சாலையோர வியாபாரிகளை கண்டறியவும், வியாபாரத்தினை சீராக செயல்படுத்தவும், விற்பனை சான்று மற்றும் விற்பனை திட்டத்தை தயாரிப்பதற்கான இரண்டு சான்று மாதிரிகளின்படி தெருவோர வியாபாரிகளுக்கு விற்பனை சான்று வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசு வீட்டு வசதி மற்றும் நகர விவகார அமைச்சர் அவர்களின் ந.க.எண். 12017/(30)/1/ 2019-2020/ UPA-II-UD நாள். 06.06.2019-ஆம் தேதிய கடிதத்தில் தெருவோர வியாபாரிகளை கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது குறித்து தமிழ்நாடு அரசு பொதுவிதி 4 வது பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி QR மற்றும் BAR CODE அடிப்படையிலான அடையாள அட்டையினை வழங்கும் போது தெருவோர வியாபாரிகளின் முழு விபரங்களை பெற முடியும் என்றும் இதன் வாயிலாக, வங்கிகளின் மூலமாக கடன் உதவி பெறவும், வங்கிக் கணக்கு துவக்கவும், நகராட்சியால் வேறு உதவி தொகை வழங்கும் போதும் சுலபமாக வியாபாரிகளின் விபரங்களை சேகரிக்கவும், அடையாளம் காண்பதற்காகவும் QR குறியீட்டை வலை தளத்துடன் இணைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் Smart Chip & QR Bar& Code உடன் கூடிய அடையாள அட்டையினை தெருவோர வியாரிகளுக்கு வழங்கவும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்நகராட்சில் உள்ள சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், தெருவோர வியாபாரிகள் முறையாக வியாபாரம் செய்யவும், நடப்பில் உள்ள சாலையோபர வியாபரிகளுக்கு QR மற்றும் Smart Card வழங்கவும், தனியார் நிறுவனம் வாயிலாக கணக்கெடுப்பு செய்து Smart அடையாள அட்டை வழங்க இந்நகர் மன்ற தீர்மான எண். 358 நாள். 29.05.2020 ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்படி தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவை பின்வருமாறு

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | நபர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|
| 1 | Sri Mangadu Kamatchiamman Business Corporation Anakaputhur, Chennai – 600 070. | ரூ. 165/- |
| 2 | ATS Multimedia, Medavakkam, Chennai – 600 100 | ரூ. 175/- |
| 3 | Elite People, Arumbakkam, Chennai - 600 106. | ரூ. 178/- |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1-இல் உள்ள Sri Mangadu Kamatchiamman Business Corporation , Chennai – 600 070 என்ற நிறுவனத்தின்

விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் மேற்கண்ட நிறுவனத்திற்கு GIS மூலம் சர்வோ செய்யவும், Bio Matric எடுத்து அடையாள அட்டை வழங்கவும், NULM – Street Vendores (SUSV) தனி செயலி தயார் செய்து Bar Code மற்றும் QR Code தனியே ஏற்படுத்தி சாலையோர வியாபாரிகளுக்கு சான்றிதழ் வழங்கும் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 2731/2014/எப்.1)

தீர்மானம் எண் : 366 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 2

சத்தியமங்கலம் நகராட்சியின் குறுக்கே பவானி ஆறு செல்கிறது. இந்த ஆறு மாசுபடுவதை தடுக்கவும், நகராட்சின் சுகாதாரத்தினை மேம்படுத்தவும் அரசு கொள்கை முடிவு அடிப்படையில் இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த அரசாணை எண்.(D) 492 நாள்.19.9.2013 இன்படி ரூ.5426.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இந்நகர் மன்ற தீர்மானம் எண்.66 நாள்.13.01.2012 இன்படி நகர் மன்ற ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில் ஒருங்கிணைந்த நகர்ப்புற திட்டக் குழுமம் நிதி ரூ.4883.00 இலட்சம் மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.543.00 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு தொழில் நுட்ப அனுமதி எண். CE/CBE.No. 07/2014-15 நாள்.27.08.2016 அன்று வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 16.9.2016 அன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் M/s.Anchor Ceramic Company (P) Ltd, Chennai நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு தற்பொழுது மண்டலம் எண்.3 க்கு உட்பட்ட பகுதிகளில் 34.518 கி.மீ அளவிற்கு கழிவு நீர் குழாய் பதிக்கப்பட்டும், ஆள்இறங்கி தொட்டிகள் (Manholes)-1630 எண்ணிக்கை, வீட்டு இணைப்பு-6050 எண்ணிக்கைகள், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (STP)-4.08 MLD-கோட்டுவீரம்பாளையம் பகுதியில் 94% பணிகள் முடிக்கப்பட்டது. செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பாதாள சாக்கடை திட்டம் பெருந்துறை அவர்களின் கடிதத்தில் மண்டலம் எண்.3 கோட்டுவீரம்பாளையம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுமான பணிகள் 90 % பணிகள், ரோட்டரி கிளப் ரோடு MPS கட்டுமான பணிகள் 94.96% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, எனவே, Internal Plumbing பணிகள் மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. Internal Plumbing பணிகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் பாதாள சாக்கடை திட்டம் முழுமையாக முடிவு பெறவும், பொதுமக்களின் சுகதாரத்தினை பேணவும் இத்திட்டம் செயல்படும் என்பதை தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் வீட்டு இணைப்பு 6050 எண்ணிக்கைகளுக்கு Internal Plumbing பணிகள் மேற்கொள்ள ரூ.310.00 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.மேற்கண்ட திட்டத்திற்கு திட்ட நிதி ஒதுக்கீடு கோரி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : -

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்கண்ட திட்டத்தினை ஏதேனும் அரசு நிதியில் மேற்கொள்ளலாம்.

(கட்டு எண்.602/2020/இ1)

தீர்மானம் எண் : 367 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.
நாள் :26.06.2020

2020-ஆம் ஆண்டு ஜீன் மாதம் 30 -ஆம் தேதி செவ்வாய் கிழமை மாலை 04.30 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் சாதாரணக் கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

## பொருட்களின் விபரப்பட்டியல்

**பொருள் : 1**

இந்நகராட்சியின் ஆணையாளர் அவர்களின் மே 2020ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 368 பதிவு செய்யப்பட்டது.

**பொருள் : 2**

இந்நகராட்சியின் நகராட்சி பொறியாளர் அவர்களின் மே 2020ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 369 பதிவு செய்யப்பட்டது.

**பொருள் : 3**

சத்தியமங்கலம் நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் குடிநீர் டேங்கர் லாரி எண்.TN 36 Y 0200 வாகனத்திற்கு சாலைவரி 01.07.2020 முதல் 30.6.2021 வரை 2020-2021 ஆம் ஆண்டிற்கு சாலை வரி வட்டார போக்குவரத்து கழகத்திற்கு ரூ.11,600-/- தொகையினை செலுத்தப்பட வேண்டும். எனவே, இச்செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலககுறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை 2020-2021 ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும், திருத்தியவரவு செலவு திட்டத்தில் சேர்க்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று சம்மந்தப்பட்ட துறைக்கு தொகை செலுத்தப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.564/2020/இ1)

தீர்மானம் எண் : 370 அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 4**

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு -அத்தாணிரோடு உரக்கிடங்கில் மக்கும் குப்பைகளை அரைக்கும் இயந்திரத்தில் ஏற்பட்ட பழுதுகளை நீக்கம் செய்ய 27.03.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டத்தில் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன அதன் விபரம்,

| வ.எண் | நிறுவணப் பெயர் | விலைப்புள்ளி ரூ |
|---|---|---|
| 1. | APJ Enviro Tech, 12/2, Sri Vetri Nagar, Pattakaranpalayam, Perundurai-Erode | 21900.00 |
| 2. | Neptune Automation, 83/3, Pallipalayam, Vaikkal Road, Attaiyampalayam Village, Erode | 19750.00 |

மேற்கண்டவற்றில் வரிசை எண் 2ல் காணும் Neptune Automation 83/3, Pallipalayam, Vaikkal Road, Attaiyampalayam Village, Erode அவர்கள் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளார்கள். மேற்கண்ட வரிசை எண்-2ல் Neptune Automation - Erode நிறுவணத்தின் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. திடக்கழிவு மேலாண்மை மற்றும் பொதுசுகாரதார அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 267/எச்.1/2020)

தீர்மானம் எண் : 371 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 5

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட கடைகள் உரிமக்காலம் 31.08.2020, 30.09.2020 மற்றும் 30.11.2020 உடன் முடிவடைவதால் மீண்டும் அரசாணை 92- ன்படி நீடித்துக் கொள்ள விருப்ப மனு கோரப்பட்டது. ஆனால் கீழ்க்கண்ட கடைதாரர்கள் தொடர்ந்து நடத்த விருப்ப மனு அளிக்கவில்லை. எனவே வருவாய் ஆய்வாளரின் குறிப்பு 08.06.2020 - ன்படி கீழ்க்கண்ட உரிமதாரர்களின் உரிம இனத்தை ரத்து செய்து புதிய இனமாக 01.09.2020, 01.10.2020 மற்றும் 01.12.2020 முதல் அரசாணை எண். 92 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு அவசர அவசியம் கருதி நகர் மன்ற முன் அனுமதி பெற்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | இனம் | கடை எண் | ஏல உரிமதாரர் பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் காலம் முடிவடையும் தேதி |
|---|---|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையம் | 8 | ஆர். பிரசன்னா | 6050 | 31.08.2020 |
| 2 | புதிய பேருந்து நிலையம் | 17 | எம். சுதாகர் | 24150 | 31.08.2020 |
| 3 | புதிய பேருந்து நிலையம் | 18 | சி. கார்த்திக் | 23575 | 31.08.2020 |
| 4 | புதிய பேருந்து நிலையம் | 19A | ஆர். சுந்தரபாண்டியன் | 11615 | 31.08.2020 |
| 5 | புதிய பேருந்து நிலையம் | 19 B | எஸ். கார்த்திக் | 13225 | 30.09.2020 |
| 6 | புதிய பேருந்து நிலையம் | 22 B | எஸ். முருகன் | 11615 | 30.11.2020 |
| 7 | புதிய பேருந்து நிலையம் | 34 | எஸ். பி. ராஜேந்திரன் | 13800 | 31.08.2020 |
| 8 | புதிய பேருந்து நிலையம் | 35 | என். சுகுமார் | 14030 | 31.08.2020 |
| 9 | புதிய பேருந்து நிலையம் | 36 | பி. முத்துராமு | 14490 | 31.08.2020 |
| 10 | புதிய பேருந்து நிலையம் | 37 | ஆர். விமல் | 18630 | 31.08.2020 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | வாரச்ச்நதை வணிக வளாகம் | 5 | எம். நவீன்குமார் | 6100 | 30.09.2020 |
| 12 | வாரச்ச்நதை வணிக வளாகம் | 31 | சந்தோஷ் பாலாஜி | 7600 | 31.05.2020 |

அலுவலகக்குறிப்பு: -

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.அவசர அவசியம் கருதி நகர் மன்ற முன் அனுமதி பெற்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3. நாளிதழில் விளம்பரம் செய்ய மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 50,000/- த்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 3800/2016/அ3)

தீர்மானம் எண் : 372 அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 6**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட நகராட்சி உரப்பூங்காவில் நகர் முழுவதும் சேகரிக்கப்படும் வாழை இலை,வாழை தண்டு,தென்னை மட்டை ஆகியவைகளை மக்காத நிலையில் உள்ளதால் அவைகளை அரைக்கும் இயந்திரத்தினை கொண்டு அரைக்கப்பட்டு பின்பு உரம் தயாரித்து கொள்ளப்படும். வாழை இலை மற்றும் வாழை தண்டு, தென்னை மட்டைகள் அரைக்கும் இயந்திரத்தினை நிறுவ 60.00 கு.தி மின்சாரம் தேவைப்படுகிறது. தற்பொழுது நகராட்சி குப்பை கிடங்களில் எற்கனவே உள்ள மின் இணைப்பு எண்.1777 இல் 20.00 கு.தி. மின்சாரம் மட்டும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மீதம் 40.00 கு.தி திறன் கொண்ட மின்சாரம் கூடுதலாக தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து பெற்று கொள்ளவும்,இதற்கு ஆகும் செலவு உத்தேசமாக ரூ.1.00 இலட்சம். இச்செலவினம் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: -

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம், 2020-21 ஆம் ஆண்டு
திருத்திய வரவு செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.
3) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு மின்சார வாரியத்திற்கு தொகை செலுத்தியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

( ந. க. எண். 100/2016/இ1)

தீர்மானம் எண் : 373 அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 7**

சத்தியமங்கலம் நகராட்சி 2020-2021 ஆம் ஆண்டு குடிநீர் நிதி திட்டத்தின் கீழ், இந்நகர் மன்ற தீர்மானத்தின்படி குடிநீர் நிதி திட்ட பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, முறையே ஒப்பந்தப்புள்ளி 25.06.2020 தேதி அன்று கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண. | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளித் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | Conversion of Dumber Placer into Water Supply Tanker Lorry in Sathyamangalam Municipality | ரூ.930000 | M/s.Lakshmi Auto Diesel Works Mettur Dam | ரூ.829150-/- | - |
| | | | M/s.JVK Auto Diesel Works Salem | ரூ.831800-/- | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | Hire Charges of water Tanker Lorry at Sathyamangalam Municipality | ரூ.300000 | Thiru.K.S.Srinivasan Contractor Sathyamangalam | ரூ.267200-/- | ---- |
| | | | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.283900-/- | ---- |
| 3 | Providing New Borewell with power pump and water Supply arrangements in Danvasi Colony in ward No 1 at Sathyamangalam Municipality | ரூ.200000 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.174070-/- | மதிப்பீடு தொகையினை விட 0.22 % குறைவு |
| | | | Thiru.C.P.Gopalakrishanan Contractor Chennimalai | ரூ.175389-/- | மதிப்பீடு தொகையினை விட 0.76% அதிகம் |

அலுவலக குறிப்பு-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய வ.எண்.1 இல் M/s.Lakshmi Auto Diesel Works, Mettur Dam, வ.எண். 2 இல் Thiru.K.S.Srinivasan Contractor,Sathyamangalam வ.எண். 3 இல் M/s.Vino Constructions Contractor Bhavani Sagar

(கட்டுஎண். 100/2016/இ1)

தீர்மானம் எண் : 374 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 8

சத்தியமங்கலம் நகராட்சியில் துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு. எம். சத்தியநாராயணன் என்பவர் வயது முதிர்வின் காரணமாக வரும் 30.06.2020 ம் தேதி ஓய்வு பெற உள்ளதால் அன்னார் செலுத்திய சிறப்பு சேம நலநிதி சந்தா தொகை, வட்டித் தொகை மற்றும் நகராட்சி நிர்வாக பங்குத் தொகை ஆகியவை கீழ்கண்டவாறு அனுமதித்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. 148 தவணைகள் சந்தா தொகை ரூ. 2,970/-
2. 30.06.2020 முடிய வட்டி தொகை ரூ. 19,194/-
3. நகராட்சி பங்குத் தொகை ரூ. 10,000/-

------------------

மொத்த தொகை ரூ. 32,154/-

---------------

அலுவலகக்குறிப்பு :-

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இச்செலவினத்தினை 2020-21-ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் சேர்க்கலாம்.

(ந. க. எண். 48/2020/சி1)

தீர்மானம் எண் : 375 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 9

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் காலியாகவுள்ள ஓட்டுநர் பணியிடங்களை தனியார் ஒப்பந்த அடிப்படையில் பயன்படுத்திக்கொள்ள 25.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளன.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | Relyon Facility Services Pvt ltd.Chennai | 760.00 |
| 2 | Trustus Outsourcing Solutions Private Limited.Chennai | 755.00 |

இவற்றில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரித்தல்.

அலுவலக குறிப்பு :- மூன்று ஓட்டுநர் பணியிடங்கள் காலிப்பணியிடங்களான நிலையில் பொது சுகாதாரப்பணியின் அவசியம் கருதி குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Trustus Outsourcing Solutions Private Limited.Chennai என்னும் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 540/2020/எச்.1)

தீர்மானம் எண் : 376 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 10

சத்தியமங்கலம் நகராட்சிப்பகுதியில் உள்ள அரசு மற்றும் நகராட்சிப்பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளைப் தூய்மையாக பராமரித்தல் பணியினை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள 25.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளன.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ஒருபணியாளருக்கு ஒரு நாளைக்கு ) |
|---|---|---|
| 1 | V.B.N BUILDERRS – TIRUPPUR | 604.47 |
| 2 | SREE BANNARIAMMAN BUILDERS- GOBICHETTIPALAYAM. | 641.47 |

இவற்றில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரித்தல்.

அலுவலக குறிப்பு :- பள்ளிக் கழிவறைகள் பராமரித்தல் பணியின் அவசியம் கருதி குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள V.B.N BUILDERS - TIRUPPUR என்னும் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 541/2020/எச்.1)

தீர்மானம் எண் : 377 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 11

சத்தியமங்கலம் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகள் அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்படும் பேட்டரியால் இயங்கக்கூடிய வாகனங்களை பழுது நீக்கி பராமரிப்பு பணிகள் செய்ய 25.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன அதன்விபரம் பின்வருமாறு.

| வரிசை எண் | பணியின் விபரம் | அளவு | ஜெயம் எக்யூப்மெண்ட்ஸ் என்ஜினியரிங்-திருப்பூர் | D.S.என்ஜினியரிங்-ஈரோடு. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | Differential – 35" | Pc | 6125.00 | 5825.00 |
| 2 | Controller | Pc | 5900.00 | 5600.00 |
| 3 | Motor(85030090) | Pc | 8650.00 | 8500.00 |
| 4 | Shocker | Set | 5900.00 | 5500.00 |
| 5 | Front Brake Drum Assembly Zeal-15T(SH-15) | Pc | 1900.00 | 1550.00 |
| 6 | Kamini set | Set | 2000.00 | 1800.00 |
| 7 | Handle T 25x31 | Set | 1100.00 | 850.00 |
| 8 | Throttle | Set | 950.00 | 750.00 |
| 9 | Meter | Pc | 1000.00 | 850.00 |
| 10 | Iron Rim – 4x12 | Pc | 250.00 | 1300.00 |
| 11 | Converter | Pc | 1800.00 | 599.00 |
| 12 | Head Light LED | Pc | 1500.00 | 1000.00 |
| 13 | Indicator Front | Set | 250.00 | 120.00 |
| 14 | Handle Bearing 30205 | Set | 650.00 | 620.00 |
| 15 | Mudguard | Pc | 550.00 | 400.00 |
| 16 | Hand Brake and Wire | Set | 650.00 | 497.00 |
| 17 | Handle Rod | Pc | 520.00 | 405.00 |
| 18 | Horn- Double Horn | Pc | 450.00 | 322.00 |
| 19 | MCB | Pc | 500.00 | 300.00 |
| 20 | Shocker Cover– 31mm | Set | 390.00 | 250.00 |
| 21 | Indicator Rear | Set | 450.00 | 331.00 |
| 22 | Break Rod set 38/27 | Set | 500.00 | 359.00 |
| 23 | Break paddle | Pc | 450.00 | 276.00 |
| 24 | Front Axle-12mm with Bush | Pc | 450.00 | 294.00 |
| 25 | Ignition switch | Pc | 350.00 | 221.00 |
| 26 | Back Horn | Pc | 350.00 | 184.00 |
| 27 | Front Brake wire | Pc | 380.00 | 221.00 |
| 28 | Charging Socket | Pc | 320.00 | 230.00 |
| 29 | Wheel Cap Small | Set | 200.00 | 92.00 |
| 30 | Hangers | Pc | 400.00 | 258.00 |
| 31 | Wiring Kit | Pc | 1700.00 | 1378.00 |
| 32 | U plate | Pc | 200.00 | 101.00 |
| 33 | U Bolt | Pc | 120.00 | 64.00 |
| 34 | Brake Spring - Big | Pc | 90.00 | 27.00 |
| 35 | Brake Spring - Small | Pc | 50.00 | 27.00 |
| 36 | White Bush | Pc | 60.00 | 18.00 |
| 37 | Black Bush | Pc | 60.00 | 18.00 |
| 38 | BACK TYRE | Pc | 1600.00 | 1327.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 39 | TUBE | Pc | 450.00 | 276.00 |
| 40 | FRONT BREAK BED ROCK | Pc | 2100.00 | 1750.00 |
| 41 | Lithium Battery | 1 | 55600.00 | 53100.00 |
| 42 | Charger | 1 | 5800.00 | 6120.00 |
| 43 | For BOV Labour charges | Per labour | 500.00 | 350.00 |
| | **Total** | | **113215.00** | **104060.00** |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரித்தல்.

**அலுவலக குறிப்பு :-**

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண் 5 இல் கண்டுள்ள திருவாளர்கள் DS Engineerings Erode என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மிகவும் குறைவாக உள்ளது அதனை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 1337/2019/எச்.1)

தீர்மானம் எண் : 378 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 12

சத்தியமங்கலம் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகள் அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்படும் Tata Ace வாகனம் எண் TN 36 AQ 1618 வண்டியினை பழுது நீக்கி பராமரிப்பு பணிகள் செய்ய 25.6.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன அதன்விபரம் பின்வருமாறு.

| வரிசை எண் | வேலையின் விபரம் | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்- மேட்டுர் டேம். | ஜே.வி.கே ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்- சேலம் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | கம்பிளீட் இரண்டுகோட் பெயிண்டிங்,வாட்டர் சர்வீஸ்,எண்கள்,எழுத்துகள்,F.C.ஸ்டிக்கர் ஒட்டுதல். | 9850.00 | 10500.00 |
| 2 | கம்பிளீட் இன்ஜின்,கியர் பாக்ஸ்,கிரவுன் ஆயில் சர்வீஸ் செய்து,ஆயில் பில்டர்,டீசல் பில்டர் மாற்றுதல்,ஏர்பில்டர் புதியதுமாற்றுதல் (ஆயில் நகராட்சிசப்ளை) | 4950.00 | 5200.00 |
| 3 | கியர் பாக்ஸ் கழற்றிகிளட்ச் பிளேட்,கவர் அசம்புலி,ரிலீசர் பேரிங் புதியதுமாற்றுதல். | 12950.00 | 13750.00 |
| 4 | இன்ஜின் ஹெட் பிரித்து,ஹெட் வால்வு,சீட்டிங் செய்துஹெட் மட்டம் சர்பேசிங் செய்துகேஸ்-கட் புதியதுமாற்றியது. | 15500.00 | 17000.00 |
| 5 | ரேடியேட்டர் அசம்புலி புதியதுமாற்றுதல். | 3250.00 | 3500.00 |
| 6 | கியர் பாக்ஸ் டாப் 1 No,சிறியஎன்டுபால் 2 No's,பெரியஎன்டுபால் 1No.புதியது. | 6500.00 | 6900.00 |
| 7 | புதியபேட்டரி1 No. (பழையபேட்டரிகழித்து) | 6450.00 | 6850.00 |
| 8 | பாடிபின்புறம் பிளாட்பாம் இத்துப் போனதைஎடுத்துவிட்டுபுதியதகரம் | 22800.00 | 24700.00 |

| | | | |
|---|---|---|---|
| | போட்டுவெல்டிங் செய்தல்,பேக் இரண்டுடோர் டிங்கரிங்,வெல்டிங் செய்துடோர் சீட்டிங் செய்தல். | | |
| 9 | செல்ப் மோட்டார் டைனமோசர்வீஸ் செய்தல். | 5500.00 | 5900.00 |
| 10 | கம்பிளீட் எலக்ட்ரிக்கல் செக்கப் செய்துபழுதடைந்தபல்புமாற்றுதல். | 2500.00 | 2800.00 |
| 11 | நான்குவீல் கிரீஸ்,ஆயில் சீல்,லாக் வாசர் பழுதடைந்தபேரிங்,லைனிங் மாற்றுதல். | 9400.00 | 10600.00 |
| | **மொத்தம்** | **99650.00** | **107700.00** |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரித்தல்.

**அலுவலக குறிப்பு :-**

1 வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண் 3 இல் கண்டுள்ள திருவாளர்கள் லட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ்-மேட்டூர் டேம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மிகவும் குறைவாக உள்ளது அதனை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 443/2020/எச்.1)

தீர்மானம் எண் : 379 அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 13**

சத்தியமங்கலம் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகள் அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்படும் Tata Ace வாகனம் எண் TN 36 AQ 1606 வண்டியினை பழுது நீக்கி பராமரிப்பு பணிகள் செய்ய 25.6.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன அதன்விபரம் பின்வருமாறு.

| வரிசை எண் | வேலையின் விபரம் | லட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ்-மேட்டூர் டேம். | ஜே.வி.கே ஆட்டோ டீசல் ஓர்க்ஸ்-சேலம் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | கம்பிளீட் இரண்டுகோட் பெயிண்டிங்,வாட்டர் சர்வீஸ்,எண்கள்,எழுத்துகள் எழுதுதல் மற்றும் F.C.ஸ்டிக்கர் ஒட்டுதல். | 9850.00 | 10500.00 |
| 2 | நான்குவீல் கிரீஸ்,ஆயில் சீல்,லாக் வாசர்,பழுதடைந்தபேரிங்,லைனிங் மாற்றுதல். | 9400.00 | 10600.00 |
| 3 | கம்பிளீட் இன்ஜின்,கியர் பாக்ஸ்,கிரவுன் ஆயில் சர்வீஸ் செய்து,ஆயில் பில்டர்,டீசல் பில்டர் மாற்றுதல் (ஆயில் நகராட்சி சப்ளை), ஏர்பில்டர் புதியது. | 4950.00 | 5200.00 |
| 4 | கியர் ராடு புஷ்-கிட் புதியதுமாற்றுதல். | 2800.00 | 3150.00 |
| 5 | கியர் பாக்ஸ் கழற்றிகிளட்ச் பிளேட்,கவர் அசம்புலி,ரிலீசர் பேரிங் புதியதுமாற்றுதல். | 12950.00 | 13750.00 |
| 6 | செல்ப் மோட்டார் டைனமோசர்வீஸ் செய்தல். | 5500.00 | 5900.00 |
| 7 | பாடிபின்புறம் பிளாட்பாம் இத்துப் போனதைஎடுத்து விட்டு புதிய தகரம் போட்டு வெல்டிங் செய்தல், பேக் இரண்டு டோர் | 22800.00 | 24700.00 |

| | | | |
|---|---|---|---|
| | டிங்கரிங், வெல்டிங் செய்துடோர் சீட்டிங் செய்தல். | | |
| 8 | ரேடியேட்டர் ஓவராலிங் செய்து ஓஸ் மாற்றுதல். | 1950.00 | 2200.00 |
| 9 | ஜாயிண்ட் பென்டுசெக்கப் செய்துபுதிய ஸ்டார் மாற்றுதல. | 2800.00 | 3500.00 |
| 10 | கம்பிளீட் எலக்ட்ரிக்கல் செக்கப் செய்து பழுதடைந்த பல்பு மாற்றுதல். | 3500.00 | 2800.00 |
| 11 | கியர் பாக்ஸ் டாப் 1 No,என்டுபால் சிறியது2 No's,பெரியது 1No.புதியது. | 6500.00 | 6900.00 |
| 12 | எக்ஸ்லேட்டர் கேபிள்,கிளட்ச் கேபிள் புதியது மாற்றுதல். | 2950.00 | 3300.00 |
| | மொத்தம் | 85950.00 | 92500.00 |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரித்தல்.

**அலுவலக குறிப்பு :-**

1 வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண் 3 இல் கண்டுள்ள திருவாளர்கள் லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்-மேட்டூர் டேம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மிகவும் குறைவாக உள்ளது அதனை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 442/2020/எச்.1)

தீர்மானம் எண் : 380 அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 14**

சத்தியமங்கலம் நகராட்சி பொதுசுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த Dumber Bin, Garbage Free City மற்றும் Bin Less city திட்டத்தின்கீழ் நகரில் உருவாகும் திடக்கழிவுகள் Door to Door Collection மூலம் Primary Collection செய்யப்பட்டு நேரிடையாக நுண் உயிரி மையம் மற்றும் வளம் மீட்பு மையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. இதனால் Secondary Storage இல் பயன்படுத்தப்பட்ட வந்த Dumber Bins உபயோகற்ற நிலையில் உள்ளது.இவைகளை 25.6.2020 அன்று பொது ஏலம் விடப்பட்டதில் கீழ்கண்டவாறு பொதுஏலத்தில் கலந்து கொண்டு ஏல தொகையினை தெரிவித்துள்ளார்கள். குறைவான ஏலத்தொகை கோரியவருக்கு காயம் செய்ய நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏலதாரர்கள் | கோரிய ஏலதொகை |
|---|---|---|
| 1 | Thiru.G.K.Traders 1/58 Mariamman Koil Street Gandhi Nagar Sathyamangalam | ரூ.25900-/- |
| 2 | Thiru.Raja, Welcome Traders, Pudhu KothuKadu Sathyamangalam | ரூ.25500-/- |

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட இரண்டு ஏலதாரர்களில் அதிக ஏல தொகை கோரிய Thiru.G.K.Traders, 1/58 Mariamman Koil Street Gandhi Nagar Sathyamangalam நிறுவனத்திற்கு காயம் செய்யலாம்.

(ந. க. எண். 266/2020/இ1)

தீர்மானம் எண் : 381 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 15

சத்தியமங்கலம் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவின் திடக்கழிவுகள் அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் எண் TN 36 AQ1618 க்கு வாகன காப்பீடு காலம் 18.07.2020 உடன் முடிவடைகின்றது. எனவே மீண்டும் 19.07.2020 முதல் 18.07.2021முடிய ஓராண்டு காலத்திற்கு புதுப்பித்துக் கொள்ள உத்தேச செலவினம் ரூ.21451/-க்கு நகர்மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு :

1) நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) வாகனக் காப்பீட்டினை யுனைடெட் இண்டியா இன்சூரன்சு கம்பெனி மூலம் செய்து கொள்ள நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.
3) பொதுசுகாதாரஅவசியஅவசரம் கருதிநகர் மன்றத்தின் முன் அனுமதிபெற்று நடவடிக்கை மேற்கொண்டதை நகர்மன்ற அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 452/2020/எச்.1)

தீர்மானம் எண் : 382 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 16

சத்தியமங்கலம் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவின் திடக்கழிவுகள் அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் எண் TN 36 AQ1606 க்கு வாகன காப்பீடு காலம் 18.07.2020 உடன் முடிவடைகின்றது. எனவே மீண்டும் 19.07.2020 முதல் 18.07.2021முடிய ஓராண்டு காலத்திற்கு புதுப்பித்துக் கொள்ள உத்தேச செலவினம் ரூ.21451/-க்கு நகர்மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு :

1) நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) வாகனக் காப்பீட்டினை யுனைடெட் இண்டியா இன்சூரன்சு கம்பெனி மூலம் செய்து கொள்ள நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.
3) பொதுசுகாதாரஅவசியஅவசரம் கருதிநகர் மன்றத்தின் முன் அனுமதிபெற்று நடவடிக்கை மேற்கொண்டதை நகர்மன்ற அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 451/2020/எச்.1)

தீர்மானம் எண் : 383 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 17

சத்தியமங்கலம் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவின் திடக்கழிவுகள் அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் எண் TN 36 X0879 க்கு வாகன காப்பீடு காலம் 26.07.2020 உடன் முடிவடைகின்றது. எனவே மீண்டும் 27.07.2020 முதல் 26.07.2021முடிய ஓராண்டு காலத்திற்கு புதுப்பித்துக் கொள்ள உத்தேச செலவினம் ரூ.33065/-க்கு நகர்மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு :

1) நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) வாகனக் காப்பீட்டினை யுனைடெட் இண்டியா இன்சூரன்சு கம்பெனி மூலம் செய்து கொள்ள நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.
3) பொது சுகாதாரஅவசியஅவசரம் கருதிநகர் மன்றத்தின் முன் அனுமதிபெற்று நடவடிக்கை மேற்கொண்டதை நகர்மன்றஅங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 453/2020/எச்.1)

தீர்மானம் எண் : 384 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 18

இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் அலுவலக உள் மற்றும் புறப்பணியாளர்கள், நகர்மன்ற தலைவர் ஆகியோர் அலுவலக பணி நிமித்தமாக வெளியூர் சென்றுவர பயணப்படி 2020-2021-ம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ. 3,00,000/- ற்குள் செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 3326/2016/என். 1)

தீர்மானம் எண் : 385 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 19

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கச்சேரி வீதி சத்திரக்கடை எண். 4, திரு.வி. மாரியப்பன், த/பெ. வேலுச்சாமியாதவ் என்பவருக்கு 01.12.2018 முதல் 30.11.2021 வரை உண்டான காலத்திற்கு மாத வாடகை ரூ.8100/- அடிப்படையில் உரிம ஆணை வழங்கப்பட்டது. ஆனால் மேற்கண்ட ஏல உரிமதாரர் 11/2019 முதல் வாடகை செலுத்தாமல் இருந்து வந்தார். இவரது வாடகையினை இவரது முன் வைப்புத் தொகையில் இருந்து சரி கட்டிக் கொள்ளப்பட்டது. மீண்டும் 4/2020 முதல் நாளது தேதி வரை வாடகை செலுத்தாமல் உள்ளார். எனவே மேற்கண்ட கடையை நகராட்சி வருவாய் ஆய்வர் அவர்களின் 25.06.2020-ம் தேதிய குறிப்பின்படி பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமைத்தினை ரத்து செய்து மறு ஏலம் விடவும். அவர் செலுத்திய வைப்புத் தொகையினை பறிமுதல் செய்து, நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ள குறிப்பு வழங்கியுள்ளளர். இதனைடிப்படையில் கச்சேரி வீதி சத்திரக்கடை எண். 4 ன் உரிமத்தினை ரத்து செய்து மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு இவரின் நிலுவை வாடகை மற்றும் பொது ஏல நிபந்தனைகளின்படி ஏற்படும் இழப்பிற்கு கடை உரிமதாரரைப் பொறுப்பாக்கி அவர் செலுத்தியுள்ள வைப்புத் தொகையில் வாடகையினை சரிகட்டிக் கொள்ளவும், நிதி இழப்பிற்கு அவரையே முழு பொறுப்பாக்கி நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளவும், அவசர அவசியம் கருதி நகர் மன்ற முன் அனுமதி பெற்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1.மேற்கண்ட கச்சேரி வீதி, சத்திரக்கடை எண். 4- ன் ஏல உரிமதாரர் திரு. வி. மாரியப்பன், த/பெ வேலுச்சாமி யாதவ் என்பவர் பொது ஏல நிபந்தனைப்படி கடை வாடகை செலுத்தாமல் காலம் கடத்தி வருகின்றார். இதனை தொடர்ந்து நகராட்சி மூலம் பல அறிவிப்புகள் மற்றும் நேரிலும் அறிவுறுத்தப்பட்ட நிலையில் வாடகையினை உரிய காலங்களில் செலுத்தாமல் வேண்டுமென்றே காலம் கடத்தி வருகிறார். எனவே இவரின் உரிமம் ரத்து செய்யப்படும், வைப்புத் தொகையினை பறிமுதல் செய்யவும், அவர் செலுத்த வேண்டிய வாடகை நிலுவையினை அவருடைய வைப்புத் தொகையில் சரிக்கட்டிக் கொள்ளவும், பொது ஏலம் ஏற்படும் சகல இழப்பிற்கு உரிமதாரரைப் பொறுப்பாக்கி சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

2.அவசர அவசியம் கருதி நகர்மன்ற முன் அனுமதி பெற்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

( ந. க. எண். 3800/2016/அ3)

தீர்மானம் எண் : 386 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 20

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட இரண்டு கடைகளின் உரிமக்காலம் 31.08.2020 மற்றும் 30.11.2020 உடன் முடிவடைவதால் மீண்டும் அரசாணை எண். 92 ன்படி நீடித்துக் கொள்ள விருப்ப மனு கோரப்பட்டது. ஆனால் கீழ்க்கண்ட கடைதாரர்கள் தொடர்ந்து நடத்த விருப்பமில்லை என மனு அளித்துள்ளனர். எனவே வருவாய் ஆய்வாளரின் குறிப்பு 25.06.2020-ன்படி கீழ்க்கண்ட உரிமதாரர்களின் உரிம இனத்தை ரத்து செய்து புதிய இனமாக 01.09.2020, 01.11.2020 முதல் அரசாணை எண். 92 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு அவசர அவசியம் கருதி நகர் மன்ற முன் அனுமதி பெற்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | இனம் | கடை எண் | வரிவிதிப்பு எண் | ஏல உரிமதாரர் பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் காலம் முடிவடையும் தேதி |
|---|---|---|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையம் | 22 எ | 061/4028 | N. அப்துல் ரஜாக் | 11730 | 31.08.2020 |
| 2 | புதிய பேருந்து நிலையம் | 25 | 061/4032 | S.G. தண்டபாணி | 17250 | 30.11.2020 |

**அலுவலகக்குறிப்பு : -**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற முன் அனுமதி பெற்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 3800/2016/அ3)

தீர்மானம் எண் : 387 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 21

அரசாணை (நிலை) எண். 118, நாள். 26.09.2014-ன்படி மாண்புமிகு முதல்வரால் 01.06.2014 அன்று வெளியிட்ட அறிவிப்பின்படி இந்நகராட்சி பகுதியில் 25.05.2015-ம் தேதி முதல் அம்மா உணவகம் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. இது அரசின் கொள்கை முடிவு என்பதால் இதற்கு தேவையான அரிசி, மளிகை பொருட்கள் பால், காய்கறிகள், கேஸ் மற்றும் அங்கு பணியாற்றும் மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு மாத ஊதியம் போன்ற செலவினங்கள் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது. சென்ற வருட சராசரியினை கணக்கிட்டு 2020-2021 ஆண்டிற்கான உத்தேச செலவினம் ஒரு வருடத்திற்கு கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிக கழகத்திடம் புழுங்கல் அரிசி, பச்சரிசி வாங்க | ரூ. 20,000/- |
| 2 | சிந்தாமணி சூப்பர் மார்கெட்டில் மளிகை பொருட்கள் வாங்க | ரூ. 6,00,000/- |
| 3 | காய்கறிகள், வெங்காயம், தக்காளி உட்பட உள்ளூர் சந்தையில் வாங்க | ரூ. 3,20,000/- |
| 4 | தயிர் சாதம் தயார் செய்ய பால் வாங்க | ரூ. 1,00,000/- |
| 5 | பாரத் கேஸ் எரிவாயு சிலிண்டர் வாங்க | ரூ. 3,50,000/- |
| 6 | அம்மா உணவக பணியாளர்கள் ஊதியம் | ரூ. 9,12,000/- |

அரசு உத்திரவின்படி மேற்படி தொகையினை 2020-2021-ம் ஆண்டிற்கு உத்தேச செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அரசின் செயலாக்க உத்திரவு என்பதால், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலருந்து மேற்கொள்ளவும், மேற்படி செலவினத்தை 2020-2021 ம் ஆண்டிற்கான திருத்திய வரவு - செலவு கணக்கில் சேர்க்கவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந. க. எண். 1749/2015/சி1)

தீர்மானம் எண் : 388 அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 22**

சத்தியமங்கலம் நகராட்சியில் தினசரி காய்கறி மார்க்கெட் இயக்கப்பட்டு வருகிறது. இந்த மார்க்கெட் கட்டிடம் பல வருடங்களுக்கு முன் கட்டப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. இக்கட்டிடங்கள் அவ்வபோது சிறு சிறு பழுதுகள் ஏற்பட்டு வியாபாரம் செய்ய முடியாமல் வியாபரிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள் என்று தினசரி காய்கறி வியாபரிகள் சங்கம் கடிதம் வாயிலாக தெரிவித்துள்ளார்கள். மேலும், தினசரி மார்க்கெடில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார்கள். வரப்பெற்ற கடிதம் நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேலும், அவசர அவசியம் கருதியும் வியாபரிகள் நலன் கருதி பழுதுகள் சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.2.00 .லட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)இச்செவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு -செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.

(கட்டு எண்.100/2016/இ1)

தீர்மானம் எண் : 389 அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 23**

சத்தியமங்கலம் நகராட்சியில் உள்ள பொது சுகாதார பிரிவு வாகனங்களை 1.7.2020 முதல் 30.6.2021 வரை ஒட்டும் பணிக்கு கனரக வாகனம் இயக்கும் உரிமம் பெற்றுள்ள ஓட்டுநர்களை அளித்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் விளம்பரத்தை மாலை மலர் -ஈரோடு தினசரி செய்தித்தாளில் வெளியிட்டமைக்கு உரிய பட்டியல் தொகை ரூ.7980/- ஐ வழங்கக்கோரி (Bill No.ERD-D20030326 நாள்.11.6.2020 ) இன் படி MALAI MALAR என்னும் நிறுவனத்திடமிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் விபரப்படி பட்டியல் தொகையினை MALAI MALAR என்னும் நிறுவனத்திற்கு வழங்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- 1) நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 540/2020/எச்.1)

தீர்மானம் எண் : 390 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 24

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் மூ.மு. எண். 14547/2004/எப். 4 நாள். 21.02.2005-ன்படியும், அரசாணை எண். 285, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள். 05.11.1996-ன்படியும் இந்நகராட்சிக்கு மின் விளக்கு பராமரிப்பு பணிக்காக மின் பணியாளர் நிலை -2, பணியிடம் -1 தோற்றுவிக்கப்பட்டு தொடர் பணி நீட்டிப்பு ஆணை பெறப்பட்து வருகிறது. அதன்படி 30.09.2020 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியிடத்திற்கு 01.10.2020 முதல் 30.09.2021 வரையிலான காலத்திற்கு நீட்டிப்பு செய்து கொள்ளும் பொருட்டு கருத்து அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மேற்காணும் பணியிடம் தெரு மின் விளக்கு பராமரிப்பு அத்தியாவசியமாக தேவைப்படுவதால் 01.10.2020 முதல் 30.09.2021 வரை நீட்டிப்பு செய்து கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந. க. எண். 60/2013/சி1)

தீர்மானம் எண் : 391 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 25

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் மூ.மு. எண். 44923/1999/எப்.1 நாள்.06.12.1999-ன்படி சத்தியமங்கலம் நகராட்சிக்கு குழாய் ஆய்வாளர் -1, தலைமையிட உதவியாளர் -2 வடிகட்டி படுகை இயக்குபவர் - 4 ஆகிய பணயிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு தொடர் அனுமதி 30.09.2020 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேரபடி பணியிடத்திற்கு 01.10.2020 முதல் 30.09.2021 வரையிலான காலத்திற்கு நீட்டிப்பு செய்து கொள்ளும் பொருட்டு அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மேற்காணும் பணியிடங்கள் குடிநீர் பிரிவிற்க அத்தியாவசியமாக தேவைப்படுவதால் 01.10.2020 முதல் 30.09.2021 வரையிலான காலத்திற்கு நீட்டிப்பு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 62/2013/சி1)

தீர்மானம் எண் : 392 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.